Regd. No. M 3[illegible]

# பாலர் கல்வி

(தென் இந்திய ஆசிரியர் சங்கத்தின் மாதாந்திரத் தமிழ் பத்திரிகை)

ராஜா அண்ணாமலைபுரம், மதராஸ்-28

"முயற்சி திருவினையாக்கும்"

| தொகுதி 30 | விசுவாவசு ௵ தை – மாசி ௴<br>பிப்ரவரி—1966 | பகுதி 11 |
| --- | --- | --- |

## MEMBERS OF THE EDITORIAL BOARD

1. SRI A. K. SITARAMAN, B.A., L.T. (*Editor*)
2. ,, L. MARIAPRAGASAM, B.A., L.T., J.P. (*Publisher*)
3. ,, FRANK DORAISWAMY, M.A., M.Ed. (*Journal Secretary*)
4. ,, V. S. SARAVANAN
5. ,, S. NATARAJAN
6. ,, R. RAJAMANICKAM
7. ,, V. PERUMAL
8. ,, M. S. ARULSWAMY.

உள்நாடு :—ஆண்டு சந்தா ரூ. 3-00 ] [தனிப் பிரதி 25 பை.

# பொருளடக்கம்


| | | |
|---|---|---|
| [illegible] | ... | 185 |
| [illegible]ராமநாதபுரம் மாவட்ட ஆசிரியர் சமுக ஆண்டு மாநாடு | ... | 188 |
| [illegible] | ... | 189 |
| [illegible] குழந்தைகள் உழைக்கும் விவசாயப் பண்ணை | ... | 192 |
| [illegible]சாமியவர்களின் மடலுக்குப் பதில் | ... | 193 |
| நோபல் சமாதானப் பரிசு பெறும் யுனிஸெஃப் | ... | 194 |
| [illegible] | ... | 195 |
| கல்வி எதிரொலி (Education Echo) | ... | 196 |



[illegible] Rev. Bro. Antony at the St. Louis Institute Press, Adyar, Madras-20 and [illegible] M. L. Mathiapragasam, B. A., L. T., J. P. for the S. I. T. U. at Raja [illegible], Madras-28.

Editor: Sri A. K. Sitharaman, B. A., L. T.

# பாலர் கல்வி

தொகுதி 30 | விசுவாவசு ஞூ தை—மாசி மீ பிப்ரவரி 1966 | பகுதி 11

# ஐந்தாவது அனைத்திந்திய இடைத்தர ஆசிரியர்களின் மாநாடு பாட்னு (பீகார்)

**ஸ்ரீ A. S. ஐயங்கார்**

*(பீகார் மாநில ஆளுநர் அவர்களின் தொடக்கவுரை)*

## (முக்கியப் பகுதிகள்)

மனிதனை விலங்குக் குணம் சிறிது மற்ற சிறந்த மனிதனுக்கிச் சமுதாயத்தின் பயனுள்ள ஓர் உறுப்பாக மாற்றியமைத்தலே கல்வியின் நோக்கமாகும்.

கல்விப் பணியே தலையாய பணி என்பதென் கருத்தாகும். நாட்டிலுள்ள தொழிற்சாலைகள் நாட்டினர்க்குப் பயன்படும் பல பொருள்களை உற்பத்தி செய்கின்றன. பள்ளிக்கூடங்களும் தொழிற் சாலைகளே. அங்கே மாணவர்கள் என்ற பொருட்கள் சிறந்த மனிதர்களாக உருவாக்கப்படுகிறார்கள். மற்றத் தொழிற்சாலைகளெல்லாம் உங்கள் தொழிற்சாலைப் பொருட்களால் (மாணவர்களால்) கட்டப் படுகின்றன. ஆதலால் மாணவர்களுக்குக் கல்வி கற்பிக்கும் போது மிகவும் விழிப்போடிருத்தல் வேண்டும். ஏன் ? அந்தப் பருவந்தான் எதுவும் (நன்மையும், தீமையும்) எளிதில் இதயத்தில் பதியும் பருவமாகும்.

எங்கும், எதிலும் வேற்றுமை இருந்தல் இயல்பாகும். ஆனால் வேற்றுமையில் ஒற்றுமை காணும் பண்பை மாணவர் உள்ளத்தில் வளர்த்து விடுதல் கல்வியின் நோக்கமாகும். நாம் மற்றவர்களைச் சரிசமமாக நடந்த வேண்டும். பிறப்பால் ஒருவர் உயர்ந்தவராகவோ தாழ்ந்தவராகவோ ஆகார் என்பதை உணர்வோமாக.

" அமைதி " என்ற சொல் எல்லோருடைய உதட்டின் மீதும் நடனமாடுகிறது. ஆனால் அவ்வமைதி நீடித்து, நிலைத்து நிற்க உறுதியான கடைக்கால் பள்ளிக்கூடங்களில் தான் போடப் படுதல் வேண்டும். இன்று வாழும் மாணவர்கள் கையில் தான் எதிர்காலம் இருக்கிறது. அவர்கள் அகிம்சைக்கோர் எடுத்துக் காட்டாகத்திகழ வேண்டும். அசோகனின் இலட்சியங்கள் உங்கள் மனக்கண் முன்பு மிளிர்கின்றன வன்றே !

உங்கள் முதற்கவனம் நாட்டிற்காற்றும் தொண்டின் மீதே இருத்தல் வேண்டும். பிறகு தான் உங்கள் சொந்த நலனைப் பற்றி எண்ணுதல் வேண்டும். ஏனெனில், நீங்கள் கூலிகளல்லர். கற்றறிந்த உங்கள் தொழில் ஓர் உயர்தரத் தொழிலாகும்.

நாட்டின் சுதந்தரத்தைக் காக்கும் வீரர் களாகச் சிறுவர், சிறுமியரை உருவாக்குவீராக. அவர்களுக்கு நீவிர் சுதந்தரம், மக்களாட்சி, பண்பாடு, சுதந்தரத்திற்குப் பாடுபட்ட பெரியோர் களின் வாழ்க்கை வரலாறுகள் முதலியவற்றைப் பற்றிக் கற்றுக் கொடுக்கவில்லை யென்றால், அவர்கள் உள்ளத்தில் தியாக உணர்ச்சியை வளர்க்க முடியாது ; அவர்களை வீரர்களாக உருவாக்க முடியாது.

பொருளாதாரப் புனர் வாழ்வு பெறுவதற்கு உயர் நிலைப் பள்ளிகளிலேயே அறிவியலுக்கும், தொழில் நுணுக்கக் கல்விக்கும் மாபெரும் முக்கியத்துவம் கொடுக்க வேண்டும். இக்காலமோ

அறிவியல் காலமாகும் தொழில்; நுணுக்கக் கால மாகும். நாமோ முரண்பட்ட நாகரிகங்களுக்கு இடையில் வாழ்கிறோம். பழங்காலத்து எளிய வாழ்க்கை முறை நம்மை இனியும் ஆதரிக்க வல்லதல்ல. வாழ்க்கையை மகிழ்ச்சியுள்ள தாக்க அறிவியில் கண்டு பிடிப்புக்களை நாம் பயன் படுத்திக் கொண்டேயாக வேண்டும். நாம் இதனை என்றும் மறத்தல் கூடாது; நமது மடிமையை மறைத்தற்கு வெற்றுவே தாந்தம் பேசித்திரிதலும் கூடாது. ஆதலால், எல்ல உயர் நிலைப் பள்ளி களும். பன்னோக்குப் பள்ளிகளாக (Multi-purpose schools) வேண்டும்; அங்கே, அறிவியல், தொழில் நுணுக்கம், விவசாயம், வியாபாரம், வாணிபநிருவாகம் முதலியன கற்பிக்கப்பட வேண்டும். இவ்வாறு செய்தால், மாணவர்கள் பிற் காலத்தில், இத்துறைகளில், ஏதாவது ஒன்றிலேனும், பலவற்றிலும் தனித்திறமை பெறுவார் களன்றோ !

தாய் மொழி, இந்தி ஆகிய மொழிகளுடன் வடமொழியும் உயர் நிலைப் பள்ளிகளில், கட்டாய மாகக் கற்பிக்கப்பட வேண்டும். ஆங்கிலம் விருப்பப் பாடமாக இருக்கட்டும். அறிவியலை யாவர் விரும்பிப் படிக்கின்றனரோ அவர்கள் ஆங்கிலத்தைக் கட்டாயமாகக் கற்பாராக. ஏனெனில், உயர்நிலைப் பள்ளிகளில் பயிலும் பெரும் பான்மையினர், அயல் நாடுகளுக்குச் செல்வதுமில்லை; அறிவியலை விரும்பிக் கற்பதுமில்லை.

மாணவர் ஒழுங்கின்மை (Student's Indiscipline) பற்றி ஒரு சில, சொற்கள் சொல்ல ஆசைப்படுகிறேன். சென்ற செப்டம்பர் மாதத்தில் பாட்னாவிலும், மற்ற இடங்களிலும் மாணவர்கள் ஆர்ப்பாட்டாங்கள் செய்து, புகை வண்டி நிலையப் பார வண்டிகளையும், பெட்ரோல் கடைகளையும் கொளுத்தியதை நீங்கள் அறிவீர்கள். இவ்வார்ப்பாட்டங்கள் எல்லாம் பள்ளிக் கட்டண உயர்வை எதிர்த்துச் செய்யப்பட்டனவாகும். பள்ளிக் கட்டணம் உயர்கிறது என்றால் அது பெற்றோரைத்தான் பாதிக்கும்; ஆதலால், அவர்களன்றோ பள்ளியதிகாரிகளைச் சந்தித்து ஒரு முடிவுக்கு வரவேண்டியவர்கள். ஆனால், குழந்தைகளை அரசியல் கட்சிகளும், மற்றவர்களும் நேரடி நடவடிக்கையில் ஈடுபடுத்துகிறார்கள். இது தவறு. மாணவர்களைக் கட்டுப் படுத்துவதற்கு ஓராசிரியர் கூட ஆர்ப்பாட்டம் நடந்த இடத்திற்கு வரவில்லை. வேலை நிறுத்தம் செய்யாமல், கட்டுப் பாடுகளுக்குக் கட்டுப்பட்டு நடத்தல் வேண்டும் என்ற நல்லதொரு பாடத்தை மாணவர்களுக்குக் கற்பித்தல் உங்கள் கடமையாகும். நாட்டில் குழப்பத்தை விளைவிக்க வேண்டும் என்ற நோக்கத்தைக் கொண்ட அரசியல் கட்சிகளின் சூழ்ச்சிகளுக்கு மாணவர்கள் இரையாகக் கூடாது.

திறமை மிக்கோரே கற்பித்தல், தொழிலுக்கு வரவேண்டும் என்றால், மற்றெல்லாப் பொதுநல ஊழியர்களையும் விட ஆசிரியர்களுக்கும், பேராசிரியர்களுக்கும், மிக அதிகமான ஊதியம் கொடுக்க வேண்டும். இவ்வாறு செய்யவில்லை என்றால் திறமைமிக்க இளைஞர்கள் நிருவாகத் துறையிலும் ஊர்க்காவல் துறையிலும் வேலைக் கமர்ந்து விடுவார்கள். ஆதலால், வேறெங்கும் வேலை கிடைக்காதவர்கள் ஆசிரியர்களாகும் நிலையுள்ளது. ஆகையால், நாட்டிலுள்ள மிகச் சிறந்த அறிவு படைத்தோரை ஆசிரியப் பணிக்கு இழுத்திடக் கவர்ச்சிகரமான ஊதியம் வழங்கப்படல் வேண்டும்.

ஒரு பல்கலைக் கழகத்தின் துணை வேர்ந்தர் பதவியை விட ஒரு மாவட்டத்தின் ஆட்சியர் (collector) பதவி மிகவும் முக்கியமாகக் கருதப் படுகிறது. ஆதலின், ஆசிரியர்கள் தங்களுக்கு நல்லதோர் ஊதியம் வழங்கப்படவில்லை என்றும், சமுதாயத்தில் மதிப்பில்லை என்றும் குறைப்பட்டுக் கொள்கிறார்கள். ஒரு நாட்டில் ஊர்க்காவலர்க்கே யாவர்க்கும் மேலான தலை சிறந்த அதிகாரத்தைத் தந்தால், அந்நாடு காவல் துறை நாடு (police state) என்பதைப் புரிந்து கொள்ளலாம். நலம் நாடும் அரசினை நாம்நமது இலட்சியமாகக் கொண்டிருக்கும் போது, கல்வித் துறையில் மாறுதலை விளைத்திடும் காலம் வந்து விட்டது. மாணவரிடையேயும், சமுதாயத்திலும் ஆசிரியர்கள் மதிப் புடையோராக விளங்க வேண்டும். அப்போது தான் அவர்கள் ஊக்கத்தோடும், உற்சாகத் தோடும் பணி புரிவார்கள். ஆனால், இன்று அவர்களிடம் பயின்ற மாணவர்கள் நிருவாகிகளாகவும், பொறியியல் வல்லுநர்களாகவும் வந்து நிறைந்த ஊதியம் பெறுவோராகவும், அதிக அதிகாரம் உடையோராகவும் இருப்பதால் அவர்களைக் (ஆசிரியர்களை) காட்டிலும் மதிப்பு மிக்கோராக விளங்குகின்றனர். நிருவாகத் துறை முழுவதிலும், இந்நிலை படிப்படியாக மாறியமைதல் வேண்டும். அப்போது தான் பேராசியர்கள், முதல்வர்கள் (principle) துணை வேந்தர்கள், கல்வி வல்லுநர்கள் (Educationists) முதலானோர் மற்றவர்களைக் காட்டிலும் உயர்வாகக் கருதப்படுவார்கள்.

மாணவர்களைச் சிறந்த குடிமக்களாக்குவதற்கும், சமுதாயத்திற்குப் புத்துயிர் நல்குதற்

கும், ஆசிரியர்கள் தொண்டு மனப்பான்மை யுடனும், தியாக உள்ளத்துடனும் தூய, எளிய வாழ்க்கை வாழ்தல் வேண்டும். அப்போதைக்கப் போது அவர்கள் தங்களைத் தங்கள் தொழிலுக்கு ஏற்றவராய்த் தயார்ப்படுத்திக் கொள்ள வேண்டும்; அன்றாடம் பல துறைகளில் ஏற்படும் வளர்ச்சியினைப் பற்றி அறிந்து கொள்ளுதலும் வேண்டும். பல்கலைக் கழகங்கள், அமெரிக்கப் பேராசிரியர்களின் துணையால் கோடைப் பள்ளிகள் அண்மையில் நடத்தியது போல், அந்தந்தப் பாடங்களில் ஏற்பட்டுள்ள புது மாறுதல்களைப் பற்றியும், முறைகளைப் பற்றியும் கற்பிக்கும் வகுப்புக்கள் நடத்தப்படல் வேண்டும். தக்க பாட புத்தகங்களை வெளிக் கொணர்வதற்கு ஆசிரியர்கள் பாடு படவேண்டும். காஷ்மீர மொழியில் எழுதப்பட்ட புத்தகங்களில், பொதுவுடைமைக் கொள்கையைப் போற்றிப் புகழ்ந்து பாடங்கள் எழுதப்பட்டிருக்கின்றன என்ற செய்தி தாள்களில் வெளி வந்தது. குடியரசினை மேற்கொண்டுள்ள ஒரு நாட்டில், இது கண்டிக்கத் தக்கதாகும்.

அரசியலை நீங்கள் கைவிட வேண்டும் என்பதே என் அறிவுரையாகும். நீங்கள் வலிமையற்றவர்களாகவும், வளைந்து நெளிந்து கொடுப்பவர்களாகவும் இருந்தால், உங்களை அரசியல் கட்சிகள் பயன்படுத்திக் கொள்வது திண்ணம். இன்று பதவியில் இருப்பவர்கள் நாளை இல்லாமல் போகலாம். ஆனால், கட்சியரசியலுக்கு இரையாகாமல் என்றும் அரசு நடந்திடும் பிரிட்டிஷ் முறையை இது நாள் வரை பின் பற்றி வருகிறோம். இது ஆசிரியர்களுக்கு மற்றவர்களைக் காட்டிலும் மிகவும் பொருந்தும்.

உங்களில் யாரேனும் தவறு செய்வார்களானால் அவர்தம் தவறுகளை வெளிப் படையாகச் சுட்டிக் காட்டத் தவறாதீர்கள். கடவுளால் படைக்கப்பட்ட உயிர்கள் எல்லாமே நேர்மையுடையனவாக இருக்குமென்று கடவுளாலேயே உத்தரவாதம் அளிக்க முடியாது. ஓராசியர் தவறாக நடந்து கொண்ட காரணத்தால் தண்டிக்கப் பட்டால், நீங்கள் வேலை நிறுத்தமோ கிளர்ச்சியோ செய்யாதிருப்பீராக. நேர்மையுள்ளோருக்குத் துணையாக நிற்பீராக; நேர்மை இல்லாதாரைக் காட்டிக் கொடுப்பீராக. சிலபோது கேள்விகள் வெளியாகின்றன; ஊழல்கள் இங்கு மங்கும் நிகழ்கின்றன. இதனால் ஆசிரியச் சமுதாயமே மட்டமானதென்றும், அதனைத் தண்டித்தல் வேண்டும் என்றும் கூறுதல் சரியாகாது. தேர்வு நடக்கும் இடத்தில், ஒரு மாணவன் மற்றொரு மாணவனைப் பார்த்து எழுதும் போது, கையுங் களவுமாகப் பிடிக்கப்பட்டால், சிலபோது மாணவச் சமுதாயமே திரண்டெழுந்து வேலை நிறுத்தம் செய்கிறது. இது நல்ல தொரு பழக்கமல்ல. மாணவர்களிடையே நீங்கள் ஒரு நல்ல எடுத்துக் காட்டாக விளங்க வேண்டும்.

நாட்டின் பல பாகங்களைச் சேர்ந்த ஆயிரக் கணக்கான மாணவர்கள் கல்வி பயின்ற பல்கலைக் கழகங்களான நாலந்தாவையும், தட்சசீலத்தையும் நினைவில் நிறுத்துவீராக. பணிவுடன் கேட்டுக் கொள்கிறேன்: நீவிர் ஊக்கத் தோடும், உற்சாகத்தோடும் உழைப்பீராக. அமைதியும், நல்லெண்ணமுமே இந்தியா உலகிற்கு வழங்க விரும்பும் நற்செய்தி என்பதையும், சேவையும், தியாகமுமே மனித சமுதாயத்தின் அடிப்படை என்பதையும் மறவாதிருப்பீராக. நாட்டு ஒற்றுமையே நமக்கு உடனடித் தேவையாகும். அதைப் பற்றி அதிக அளவு கற்பிப்பீராக. பொருளாதாரப் புத்தாக்கம் நமது மற்றொரு தேவையாகும். கடவுள் உங்களுக்கு அருள் புரிவாராக. நீங்கள் ஆழ்ந்த ஆராய்ச்சிக்குப் பின் எடுக்கும் முடிவுகளும், நிறைவேற்றும் தீர்மானங்களும் வெற்றி தருவனவாக.

★

# இராமனுதபுரம் மாவட்ட ஆசிரியர்கழக ஆண்டு மாநாடு

By

**M. S. அருள்சாமி**

( உப தலைவர் S. I. T. U. )

இராமனுதபுரம் மாவட்ட ஆசிரியர் கழக 42-வது ஆண்டுமாநாடு நாட்டரசன் கோட்டை திருமதி விசாலாட்சி தொடக்கப் பள்ளியில் 20-11-65 சனிக்கிழமை பிற்பகல் தலைவர் திரு. பி. துரைக்கண்ணு முதலியார் அவர்கள் தலைமையில் நடைபெற்றது.

குமாரி ஆர். ஸ்டெல்லா சரோஜா இறை வணக்கம் பாடினுர். நாட்டரசன் கோட்டை ச. இராம. உயர் நிலைப்பள்ளித் தலைமை ஆசிரியர் திரு. S. அனந்தநாராயணன் அவர்கள் அனைவரையும் வரவேற்றுப் பேசினுர். காளையார் கோவில் ஊராட்சி ஒன்றிப்பு முன்னுள் தலைவர் பாகனேரி திரு. மு. காளலிங்கம் B. A. (HONS) அவர்கள் மாநாட்டைத் தொடங்கி வைத்தார்கள்.

இந்திய அரசினரால் பாராட்டப் பெற்ற இராமனுதபுரம் அரசர் உயர் நிலைப்பள்ளித் தலைமை ஆசிரியர் உயர் திரு M. ராஜா அய்யர் M. A., L. T., M. L. C. அவர்களைப் பாராட்டிச் சிவகங்கை திரு. சோமசுந்தரம் அய்யர் அவர்கள், சூசையப்பர் பட்டணம் மறைத் திரு. இராபர்ட் பொன்னையா அடிகள் அவர்கள், காரைக்குடி திரு. டி. செபஸ்தியான் அவர்கள், தேவகோட்டை திரு. M. J. ரெங்கசாமி ஐயர் அவர்கள், இராமனுதபுரம் திரு. கிருஷ்ணசாமி ஐயர் அவர்கள் ஆகியோர் சிறப்புரை ஆற்றினுர்கள்.

பின் நடப்பு ஆண்டிற்கு (65-66) திரு. பி. துரைக்கண்ணு முதலியார் அவர்கள் தலைவராகவும், துணைத் தலைவர்களாக திரு. எஸ். அனந்தநாராயணன் எம். ஏ., பி. டி. அவர்களும், திரு. எஸ். ஆரோக்கியம் அவர்களும், சகோதரி ஏ. குழந்தை மேரி அவர்களும், செயலாளராக திரு. வி. நாராயணன் அவர்களும் இணைச் செயலாளராக திரு. எம். எஸ். அருள்சாமி அவர்களும், தென்னிந்திய ஆசிரியர் சங்க பிரதிநிதிகளாக திரு. எம். ஜே. ரெங்கசாமி ஐயர் அவர்களும், திரு. எல். தேவதாஸ் அவர்களும் ஏகமனதாகத் தேர்ந்தெடுக்கப் பட்டார்கள்.

செயலாளர் திரு. வி. நாராயணன் அவர்கள் அறிக்கையையும் வரவு செலவுக் கணக்கும் படித்தளித்த பின்னர் ஒப்புக் கொள்ளப்பட்டன.

ஆசிரியர் அனைவருக்கும் N. C. C. பயிற்சி அளிக்க அரசாங்கம் உடனடியாக நடவடிக்கை எடுத்துக் கொள்ள வேண்டும். மதிய உணவிற்கு தற்போது வழங்கும் 6 பைசாவை 20 பைசாவாக உயர்த்தி அரசு ஆணை பிறப்பிக்கவேண்டும். ஒரு ஆசிரியர் ஒரு நிறுவனத்திலிருந்து வேருெரு நிறுவனத்திற்குச் சென்ருல் ஊழியப்பதிவேட்டில் உள்ளபடி (T. S. R.) ஊதியமும், ஊழியமும் கணக்கிடப்பட வேண்டும் என்ற முக்கிய தீர்மானங்களும் இன்னும் பல தீர்மானங்களும் ஏகமனதாக நிறைவேற்றப்பட்டன.

தேனீர் விருந்துக்குப்பின் மாநாடு முடிவடைந்தது. மாநாடு சிறப்புற நடைபெறுவதற்குத் திருவாளர்கள் S. அனந்த நாராயணன் அவர்களும், எம். அமிர்தசாமி அவர்களும், எம். எஸ். அருள்சாமி அவர்களும் மற்றும் ஆசிரியர்களும் எடுத்துக் கொண்ட முயற்சி பாராட்டுக்குரியது. ★

# கரப்பான் பூச்சி

**(COCKROACH)**

**By**

(பிரையணிவோன்)

பெட்டிகளிலும், காகிதக் கட்டுகளிலும், புத்தக அல்மாரிகளிலும் கிடங்குகளிலும், சமையல் அறைகளிலும், உணவுப் பண்டங்கள் வைக்கும் பேழைகளிலும், பீரோ, சாக்கடை, இடுக்குகள் முதலான எல்லா இடங்களிலும் காணப்படும் பூச்சி கரப்பான் பூச்சி. பகலில் மட்டும் மறைவாக ஒளிந்திருந்து இரவில் வெளிவந்து திரியும் அழையா விருந்தாளிகள் கரப்பான் பூச்சிகள். கரப்பான்களில் 3,500 வகைகளுக்குமேல் இருப்பதாக அறிஞர்கள் கூறுகின்றார்கள்.

நாம் நம் வீட்டில் பார்க்கும் கரப்பான் பூச்சிகளைப் பெரிபிளானெட்டா அமெரிக்கானா (periplaneta americana) என்று விலங்கியல் வல்லுநர்கள் அழைக்கின்றார்கள். இவை மத்திய அமெரிக்காவுடன் இந்தியர் வியாபாரத் தொடர்பு கொண்ட பொழுது இந்தியாவிற்கு வந்து, பின் பரவியதாகக் கருதப்படுகிறது. பெரிபிளானெட்டா ஓரியண்டாலிஸ் (periplaneta orientalis) என்ற மற்றோர் வகை கரப்பான்களை அரிதாகக் காணலாம். இவைகளுக்கு இறக்கை நீளம் ஆண்களுக்கு மிகக் குறைவு. பெண் பூச்சிக்கு இறக்கை இல்லை என்றே கூறலாம். மேலும் தலைக்குக் கீழாக அமைந்த பகுதிகள் கறுப்பாக இருக்கும்.

கரப்பான் பூச்சிகள் மனிதன் பூமியில் தோன்றுவதற்குப் பல மில்லியன் ஆண்டுகளுக்கு முன்னரே தோன்றியவை. ஏறத்தாழ 350 மில்லியன் ஆண்டுகளுக்கு முன்னமேயே, அதாவது பூமியில் நிலக்கரியும் எண்ணெயும் உண்டான காலத்திலேயே கரப்பான்கள் தோற்றமெடுத்து விட்டதாக ஆய்வாளர்கள் கருதுகின்றார்கள். எனவே பூமியில் வாழும் உயிர் இனங்களில் காலத்தை வென்ற பழம் பெருங்குடியாகக் கரப்பானைச் சொல்லலாம். இயற்கை மாறுதல்களால் அழிந்துபோகாமல் வாழ்க்கைப் போராட்டத்தில் தகுதி பெற்று வாழக் கற்றுக்கொண்ட உயிர் கரப்பான் ஆகும்.

சிறுத்த பேரிக்காய் வடிவத் தலையும், தட்டையான பழுப்பு உடலும், பத்து பகுதி கொண்ட வயிறும், உடலைவிட நீண்ட இறக்கைகளையும், கண்டாலே அருவருக்கத்தக்க பழுப்பு நிறத்தையும் கொண்டது கரப்பான். கரப்பான் உடலை மூன்று பகுதிகளாகப் பிரிக்கின்றார்கள். அவை 1. தலை, 2. மார்பு (thorax), 3. வயிறு என்பனவாகும். கரப்பான் பூச்சியின் தலை மிகச் சிறிதாக இருக்கிறது. எனினும் முக்கியமான உணர்வு உறுப்புக்கள், உணவுண்ணும் உறுப்புக்கள் எல்லாம் இதில்தான் அடங்கி இருக்கின்றன. தலைக்குக்கீழே மூன்று பகுதிகளாகப் பிரிக்கக் கூடிய மார்பு இருக்கிறது. இப்பகுதியில்தான் இறக்கைகளும் கால்களும் பொருத்தப்பட்டிருக்கின்றன. இறகுகள் உடலைவிட நீளமாக இருக்கும். மார்புக்குக் கீழே வயிறு இருக்கிறது. வயிறு 10 பகுதிகளாகப் பிரிக்கப்பட்டிருக்கிறது. கரப்பானின் உடலைவிட அதிக நீளத்தில் அதன் தலையில் நீட்டிக் கொண்டிருக்கும் மயிரிழை போன்ற உணர் உறுப்புக்கள் (antennae) 2 இருக்கின்றன. இவற்றின் துணை கொண்டு கரப்பான் இருளில் தன் பாதையைக் கண்டு கொள்கிறது; ஒலி அலைகளைக் கூடத் தெளிவாகத் தெரிந்து கொள்கின்றது. இந்த உணர் உறுப்புக்களில் வாசனை அறியும் செல்கள் (olfactory cell) இருக்கின்றன. உணவு, நீர் போன்ற பொருள்கள் எங்கே இருக்கின்றன என்று எளிதில் அறிந்து கொள்கிறது. இந்த உணர் உறுப்புக்கள் காதல் செய்வதற்கும் பயன்படுகின்றன. ஆண் பூச்சியைக் கண்ட பெண் பூச்சியும், பெண் பூச்சியைக் கண்ட ஆண் பூச்சியும் ஒன்றை ஒன்று சிறிது நேரம் கண்ணோடு கண் நோக்கும். ஆண்

கரப்பான் பின்னர் பெண் கரப்பானை நெருங்கி தன்னுடைய உணர் உறுப்புகளினால் பெண் பூச்சியின் உணர் உறுப்புக்களை அன்புடன் தடவும். அந்த இதமுள்ள தடவுதலினால் பெண், கரப்பான் பூச்சி மயங்கிவிடும்.

உணர் உறுப்புக்களின் அடியில் சிறிய படைபோன்று இருக்கிறது. இதனைப் பெனெஸ்ட்ரே (fenestrae) என்று அழைக்கிறார்கள். எனினும் இதன் பயன் என்ன என்பது புலனாகவில்லை. உணர் உறுப்புக்களின் பக்கங்களில் 2 கண்கள் இருக்கின்றன. ஒவ்வொரு கண்ணும் பல தனிப் பகுதிகளாகப் பிரிக்கக் கூடியவை. இதன் கண்களைக் கூட்டுக் கண்கள் (compound eyes) என்றழைக்கிறார்கள். கூட்டுக் கண்ணின் ஒவ்வொரு தனிப்பகுதியும் ஒரு தனிக் கண்ணைப்போல இயங்குகின்றது. இதன் மூலம் ஒரு காட்சியைப் பார்க்கும் போது அதன் ஒவ்வொரு பகுதியும் தன்னால் இயன்ற ஒரு சிறு பகுதியையே பார்க்கின்றன. இவ்வாறு பல பகுதிகளும் காணுகின்ற தோற்றம் ஒன்று சேர்ந்து கரப்பான் பூச்சி முழுவடிவத்தையும் காண முடிகிறது. தலை ஐந்து வளையக்கூடிய தட்டைகளால் (chitinous plates) ஆனது. தலையில் இரண்டு கடிக்கும் உறுப்புக்களும் (mandibles) இருக்கின்றன.

பார்க்கும்போது கரப்பான் வயிறு பல பகுதிகளாகப் பிரிக்கப்பட்டிருப்பது தெரியும். மொத்தம் பத்து பகுதிகள் இருந்தாலும் ஏழு பகுதிகளே நன்கு விளக்கமாகத் தெரியும். எட்டு, ஒன்பது பகுதிகள் ஏழாவது பகுதியினால் மறைக்கப்பட்டிருக்கும். பெண் பூச்சியின் வயிறு ஆண் பூச்சியின் வயிற்றைவிடத் தட்டையாகவும் அகலமாகவும் இருக்கும்.

பருவமடைந்த 24 மணி நேரத்தில் கரப்பான் இனப்பெருக்கம் செய்யும் தகுதியைப் பெறுகிறது. கரப்பான் முட்டையிட்டுக் குச்சி பொறிக்கும் வகையினது, சில வகைக் கரப்பான்களின் பெண்கள் தங்களுடைய உடலிலேயே முட்டைகளைக் குஞ்சு பொறித்து விடுகின்றன. மற்ற வகைக் கரப்பான் பூச்சிகள் முட்டைகள் அடங்கிய முட்டைப் பையை (Egg ease) தங்களுடைய அடி வயிற்றின் பக்கத்தில் ஒட்ட வைத்துக் கொண்டிருக்கும். இந்த முட்டைப் பை வயிற்றின் எட்டாவது பகுதிக்கும் ஒன்பதாவது பகுதிக்கும் இடையில் இருக்கும். முட்டைப் பையில் பொதுவாக ஏறத்தாழ 16 முட்டைகள் இருக்கும். உணவுப் பொருள்கள் கிடைக்கக்கூடிய சரியான இடம் கிடைத்தவுடன் பெண் கரப்பான் பூச்சி முட்டைப் பையை அங்கே மறைவாக இட்டு வைத்துவிடும். முழு வளர்ச்சியை அடைந்த கரப்பான் குஞ்சுகள் முட்டைப் பையை உடைத்துக் கொண்டு வெளிவரும். வெளி வந்த குஞ்சு வெண்மையாகவும் கரிய கண்களை உடையனவாகவும் இருக்கும். இறக்கைகள் வளர்ச்சியடையாமல் மிருதுவான தோலையுடையனவாகவும் இருக்கும். வளர்ந்து பூச்சி உருவத்தில் பெரிதாகப் பெரிதாக, மேல் தோல் உரியும். இவ்வாறு 7 முறைகள் கரப்பான் பூச்சி தோலுரித்த பின்னரே பருவமடைகின்றது. ஏழாம் முறை கடைசியாகத் தோலுரிக்கும் போதுதான் இறக்கைகள் முளைக்கின்றன. ஒரு மாதத்தில் பூச்சி பருவமெய்துகின்றது. எட்டு ஒன்பது மாதங்களில் அது தன்வாழ்வை முடித்துக்கொள்கிறது. முட்டையிலிருந்து வெளியே வந்த குஞ்சு உணவின்றி ஒரு வாரகாலம் இருக்க முடியும். எனவே உணவில்லாத இடத்தில் முட்டை இடப்பட்டாலும் குஞ்சுகள் பிழைத்துக் கொள்கின்றன.

கரப்பான்கள் உண்ணாத பொருளே இல்லையென்று சொல்லலாம். கண்ட எதையும் தின்றுவிடுகிறது. புளி, மிளகாய் போன்ற பொருட்களைத் தின்னும். இரசம், மோர், குழம்பு வகைகளை நக்கிக் குடிக்கும். கதவுக்கு அடிக்கும் வண்ணப் பூச்சுகளைக் கூட தின்கின்றன. சோப்பு என்னும் சவுக்காரத்தையும் விடுவதில்லை. துணியைத் துளைக்கும். உணவில்லாதபோது மரக்கட்டைகளைத் தின்கின்றன. கரப்பானின் உணவுப் பாதையில் சுரக்கின்ற செரிக்கும் நீர் (Enzyme) மரக்கட்டையையும் செரித்து விடுகின்றது. எந்த உணவும் கிடைக்கவில்லையானால் தன் தோலையும், தன் இன முட்டைகளையும் தின்று விடும். இன்னும் ஒரு வியப்பூட்டும் செய்தி என்ன என்றால் கரப்பான்கள் உணவும் நீரும்

இல்லாமல் ஒரு மாதம் வாழும். வறண்ட உணவுகளை உண்டே 5 மாதங்கள் வரை உயிர் வாழும்!

கரப்பானின் உடலில் நாற்றமுள்ள ஒரு வகை நீர் சுரக்கின்றது. அதனால் மற்ற உயிர்கள் அதனை உண்ண விரும்புவது இல்லை. உடல் தட்டையாக இருப்பதால் எந்த இடுக்கிலும் புகுந்து கொண்டு தன்னைக் காப்பாற்றிக் கொள்கிறது. அதன் உடல் தோலானது அழுந்திக் கொடுக்கும் தன்மையது. எனவே நாம் அதனை மிதித்தாலும் எளிதில் சாவதில்லை. பனிக்கட்டியில் கரப்பானை உறையச் செய்தாலும் பனி கரைந்து தண்ணீரானதும் இது இறக்காமல் எழுந்து செல்லும்.

கரப்பான்கள் மனிதன் தாங்கிக் கொள்ளக்கூடிய ரேடியோ அணுக்கதிர்களின் அளவைப் போல் 100 மடங்கு அதிக ரேடியோ அணுக்கதிர்களைத் தாங்க வல்லனவாம். இதய நோய், புற்று நோய் போன்ற பாரம்பரிய ஆய்வுகளில் கரப்பான் பூச்சியைப் பயன்படுத்துகிறார்கள்.

கிழக் கரப்பானையும் இளங் கரப்பானையும் வெட்டிப் பிணைத்தால் கிழக் கரப்பானுக்கு இளமை திரும்பி விடுகிறதாம். இவ்வாராய்ச்சி மனிதனுடைய ஆயுளை நீடிக்கத் துணை செய்யும் என்று நம்புகிறார்கள்.

கரப்பான்கள் டைபாய்டு, இளம்பிள்ளை வாதம், வெண்குஷ்டம், வயிறு சம்பந்தப்பட்ட நோய்கள் முதலானவற்றைப் பரப்புகின்றன என்று கூறுகிறார்கள். எனவே கரப்பான் சேர்ந்தால் அதிர்ஷ்டம் சேரும் என்ற மூட நம்பிக்கையை விட்டொழியுங்கள். கரப்பான் கொல்லி மருந்துகள் கடைகளில் கிடைக்கும். அவற்றைக் கொண்டு கரப்பான் தொல்லையைப் போக்கிக் கொள்ளுங்கள். எந்தச் சூழ்நிலையிலும் வாழக் கூடியவைகள் கரப்பான்களாததலால் நாம் பயன்படுத்தும் கொல்லி மருந்துகளை இலட்சியம் செய்வதில்லை. உணவுப் பொருள்களைச் சிதறும்படி செய்யாமல் வீட்டைத் தூய்மையாக வைத்திருந்தால் கரப்பானை ஒழிக்கலாம்.

★

## ஓர் அறிவிப்பு

ஆசிரியர்கள் கல்வி தொடர்பான செய்திகளைத் தெரிந்து கொள்ளவும், பொருத்தமான கருத்துக்களைத் திருத்தமாக வெளியிடவும் விரும்பினால், தென்னிந்திய ஆசிரியர்ச் சங்கத்தின் பொதுச் செயலாளராகத் திகழும் திருவாளர் மரியப்பிரகாசம் J. P. அவர்களுக்குக் கீழ்க்கண்ட முகவரிக்கு மடல் வரைந்து அனுப்புமாறு கேட்டுக்கொள்ளப்படுகின்றனர்.

**அமல நிலையம்,**

6, கச்சேரி ரோடு,

**மயிலை, சென்னை - 4.**

# ஊனமுற்ற குழந்தைகள் உழைக்கும் விவசாயப் பண்ணை

(மைகேல் உட்ஸ்டாக்)

ஆரோக்கியமான குழந்தைகளைப் பற்றிப் பெற்றோர்கள் கவலைப்படுவதில்லை. ஆனால் ஊனமுற்ற குழந்தைகளுடைய எதிர்காலம் பற்றி, அவர்களுடைய பெற்றோர்கள் கவலைப்படுவது இயல்பு. ஊனமுற்ற குழந்தைகளுக்கு அதுவும் மனவளர்ச்சியில்லாத குழந்தைகளுக்கும் விசேஷப் பராமரிப்புத் தேவை. பணியினாலோ, தெம்பில்லாத காரணத்தாலோ, சில பெற்றோர்களால் தங்களுடைய குழந்தைகளைப் பேணிப் பாதுகாக்க முடிவதில்லை. அவர்கள், தங்களுடைய காலத்திற்குப் பிறகு, தங்களுடைய குழந்தைகளுடைய வாழ்க்கை எப்படியிருக்குமோ என்று அச்சப்படுகிறார்கள்.

ஒவ்வொரு நாட்டிலும் இந்தப் பிரச்னை உண்டு. வசதிக்கேற்றபடி இதைச் சமாளிப்பதற்கு வழிவகுத்துக் கொண்டு செயலாற்றுகிறார்கள். சில நாடுகளில், தனியாக நிறுவப்பட்ட விடுதிகளில் ஊனமுற்ற குழந்தைகள் வசிக்கிறார்கள். தொழிற்சாலைகளிலும் சில குழந்தைகள் பணியாற்றுகிறார்கள். குறைபாடு இருப்பதால், சுலபமாகச் செய்யக்கூடிய அலுவல்களையே அவர்களுக்குத் தருகிறார்கள்.

இங்கிலாந்தில் கிளாஸ்டர்ஷயரில் வசிக்கும் திரு. பீட்டர்ஃபோர்ப்ஸ், ஊனமுற்ற குழந்தைகளுக்கு உதவும் நோக்கத்துடன் 'ஹோம்ஃபாரம் டிரஸ்ட்' என்ற நிறுவனத்தை, மூன்று ஆண்டுகளுக்கு முன்பு ஏற்படுத்தினார். பிரிஸ்டல் நகரத்தில், ஊனமுற்ற குழந்தைகளுக்காக ஏற்பட்ட பள்ளிக்கூடத்தில் ஃபோர்ப்ஸ் பயின்றதால், ஊனமுற்ற குழந்தைகளுடைய கஷ்டங்களையும் அந்தக் குழந்தைகளுடைய பெற்றோர்களின் கவலையையும் அவர் நன்கு அறிவார். ஹோம் ஃபாரம் டிரஸ்ட் நிறுவுவதற்காக அவர் பழைய மாளிகை ஒன்றை வாங்கி அதைத் திருத்தியமைத்ததுடன் புதிய விடுதி ஒன்றையும் நிர்மாணித்தார். இதற்கு ஆன செலவு சுமார் 8000 பவுன்கள் (1. 06 லட்சம் ரூபாய்கள்). இந்த மாளிகையில் 19 பையன்களுடனும் 9 சிறுமிகளுடனும் அவர் வசிக்கிறார். இவர்கள் அனைவரும் ஊனமுற்றவர்கள். அவர் ஆற்றும் பணிக்கு உதவியாக ஆறு சிப்பந்திகள் இருக்கிறார்கள்.

திரு.ஃபோர்ப்ஸும் அவருடன் வசிக்கும் பையன்களும் சிறுமிகளும் பண்ணையில் உழைக்கிறார்கள். என்ன என்ன பயிரிட வேண்டும் என்பதுபற்றி திரு. ஃபோர்ப்ஸ் திட்டமிடுகிறார். அவருடைய முயற்சி வெற்றி பெற்றது. அந்தப் பண்ணையிலிருப்போர் ஓரளவுக்குத் தன்னிறைவுடன் வாழ்கிறார்கள். ஃபோர்ப்ஸின் பண்ணையில் காய்கறி பயிரிடுவதற்காகப் பதின்மூன்று ஏகரா நிலம் ஒதுக்கியிருக்கிறார்கள். இங்கு விளையும் காய்கறிகளை விற்பனைக்காக உள்ளூர் கடைகளுக்கும் கிளாஸ்டர் மார்க்கெட்டுக்கும் அனுப்புகிறார்கள். பண்ணையின் ஒரு பகுதியில் பன்றிகளை வளர்க்கிறார்கள். மற்றோர் பகுதியில் ஆடுமாடுகளை வளர்க்கிறார்கள். பிறிதோர் இடத்தில் ஆயிரம் கோழிகள் உண்டு.

பண்ணையில் தச்சுப் பட்டறையும், உழவு எந்திரங்களைப் பழுது பார்ப்பதற்காக ஓர் பட்டறையையும் ஃபோர்ப்ஸ் நிறுவியிருக்கிறார். நெசவுக் கொட்டடி ஒன்றை நிறுவும் யோசனையும் அவருக்கு உண்டு.

ஹோம் ஃபாரம் டிரஸ்ட், ஊனமுற்ற குழந்தைகளுக்குப் பயிற்சியளிப்பதற்காகப் பெற்றோர்களிடமிருந்து கட்டணம் வசூலிப்பதில்லை. விடுதியில் தங்கும் குழந்தைகளுக்கு ஆண்டில் நான்கு வாரம் விடுமுறையளிக்கப்படுகிறது. அந்தச் சமயத்தில் அவர்கள் தங்களுடைய பெற்றோர்களுடன் தங்கிவிட்டுத் திரும்புகிறார்கள். சில குழந்தைகள் தங்களுடைய பெற்றோர்களைச் சந்திப்பதற்காக, ஞாயிற்றுக்கிழமைகளில் செல்வதுமுண்டு.

ஹோம் ஃபாரம் டிரஸ்ட் ஆற்றும் பணியைக் கண்டு மகிழ்ச்சியடைந்த பெற்

றோர்கள், அதற்கு நிதி உதவியளிக்கிறார் கள். விழாச் சந்தைகள், போட்டிப்பந்தயங் கள் முதலியவற்றை ஏற்பாடு செய்து டிரஸ்டுக்கு நிதி திரட்டுவதும் உண்டு. பொதுஜன சங்கங்களும், இந்த டிரஸ்டுக்கு மான்ய உதவியளிக்கின்றன.

டிரஸ்டு ஆற்றும் பணி சிறப்பாக இருக் கிறது. ஊனமுற்ற குழந்தைகள் மகிழ்ச்சி யுடன் வாழ்வதில் அது அக்கறை காட்டு கிறது. டிரஸ்டு விடுதியில் வசிக்கும் குழந் தைகள் அனைவரும் பண்ணையில் வேலை செய்கிறார்கள். வந்த புதிதில் சில பையன் களுக்கு மண்வெட்டி என்றால் என்ன, பரம்புச் சட்டம் என்றால் என்ன என்று கூடத் தெரியாது. ஆனால் இப்போது இவர் கள் கழனியில் சிறப்பாகப் பணியாற்று கிறார்கள். கீரைப்பாத்தி போடுகிறார்கள்; கோழிகளை வளர்க்கிறார்கள்.

ஊனமுற்ற குழந்தைகள் வசதியுடன் வசிக்கும் ஓர் கிராமமாகத் தம்முடைய பண்ணையை விரிவாக்க வேண்டும் என்பது திரு. ஃபோர்ப்ஸின் ஆசை. ஆகவே, உழைப்பதில் ஆர்வமுள்ள ஊனமுற்ற குழந்தைகளைத் தம்முடைய பண்ணைக்கு அழைத்து வருவதிலும் அவர்களுக்கு வேலை வசதியளிப்பதிலும் அவர் அக்கறை காட்டுகிறார்; நண்பர்களும் அவருக்கு ஊக்கமளிக்கிறார்கள். ★

## முத்துச்சாமியவர்களின் மடலுக்குப் பதில்

1. ஆசிரியத் தொழிலில் ஈடுபட்டுள்ள ஒவ்வொருவருக்கும் தென்னிந்திய ஆசிரியைச் சங்கத்தில் உறுப்பினராகும் உரிமையுண்டு.

அந்தந்த ஆசிரியர் தென்னிந்திய அவரவர் தொகுதியில், தெ. இ. ஆசிரியர் சங்கத்தில், அங்கத்தினராய் விட்டால் போதும். அவர்கள் தாமாகவே தெ. இ. ஆ. சங்கத்தின் உறுப்பினராகச் சேர்த்துக் கொள்ளப்படுவர். உதா ரணமாக கோவை வட்டத்தைச் சேர்ந்த ஆசிரியர் ஒருவர் அவர் பள்ளி ஆசிரியர் சங்கத்தில், உறுப்பினரானால் போதும். அந்த ஆசிரியச் சங்கம் கோவை மாவட்ட ஆசிரியச் சங்கத்துடன் சேர்க்கப்பட்டிருக்கிறது. அது தெ. இ. ஆசிரியச் சங்கத்துடன் சேர்க்கப்பட்டிருக்கிறது.

ஒவ்வொரு மாவட்ட ஆசிரியர் சங்கத்திலிருந்து இரண்டுபேர் தேர்ந் தெடுக்கப்பட்டு தெ. இ. ஆ. சங்கச்செயற் குழுவிற்கு அனுப்பலாம்.

2. தயைகூர்ந்து கோவை மாவட்ட ஆசிரியர் சங்கத்தில், விசாரணை செய்து உறுப்பினர் கட்டவேண்டிய கட்டணம் எவ்வளவு என்று தெரிந்து கொள்வீராக.

3. ஆசிரியர்கள் தெ. இ. ஆ. சங்கத்தில் சேருவதற்குத் தாங்கள் தாளாளரிட மிருந்து (Correspondent) அனுமதிபெறவேண்டிய அவசியமில்லை. ஏனெனில், தெ. ஆ. சங்கம் அரசின் அங்கீகாரம் பெற்ற சங்கமாகும். ஆசிரியர்கள் இச் சங்கத்தில் சேர்ந்தால், மேலாண்மையினர் (அவர்கள் மீது) நடவடிக்கை எடுப்பதும், எடுக்காததும் அவர்களின் (மேலாண்மை யினரின்) விருப்பமாகும். இதுவரை, எந்த மேலாண்மையினரும் தங்கள் கீழ் பணிபுரியும் ஆசிரியர்கள் இச் சங்கத்தில், சேர்ந்ததால் நடவடிக்கை எடுத்ததாக நாங்கள் கேள்விப்பட்டதில்லை.

# நோபல் சமாதானப் பரிசுப் பெறும்

# யுனிசெஃப்

நடப்பு ஆண்டுக்குரிய நோபல் சமாதானப் பரிசு ஐ. நா. குழந்தைகள் நிதி (யுனிசெஃப்) நிலையத்துக்கு வழங்கப்பட்டுள்ளது. உலகம் முழுவதிலுமுள்ள இளைஞர்களின் நிலையை மேம்படுத்தும் முயற்சிகளில் யுனிசெஃப், தான் தோன்றியது முதலே முன்னணியில் நின்று பணி புரிந்து வந்துள்ளது.

நடப்பு ஆண்டு நோபல் சமாதானப் பரிசு ஐ. நா. குழந்தைகள் நிதி நிலையத்துக்குக் கிடைக்குமென்ற அறிவிப்பு ஆஸ்லோ நகரில் திங்களன்று வெளியாயிற்று. பரிசு பெறுபவரைத் தெரிந்தெடுக்கும் நார்வே சட்ட மன்ற நோபல் பரிசுக் குழு, அறிவிப்பை வெளியிட்டது.

வளர்ச்சி கண்டு வரும் நாடுகளிலுள்ள குழந்தைகளுக்கு உதவி செய்யும் திட்டங்களுக்காக யுனிசெஃப் இதுவரை 48 கோடி டாலர் ஒதுக்கியுள்ளதாகச் சென்ற ஆண்டு அறிவிக்கப்பட்டது. ஐ. நா. உறுப்பு நாடுகள் ஒருமித்து முடிவு செய்ததன் விளைவாக 1946 டிசம்பர் 11-ந் தேதி யுனிசெஃப் பிறந்தது. ஐ. நா. சர்வதேசக் குழந்தைகள் அவசர நிதி என்று முதலில் அதற்குப் பெயரிட்டிருந்தார்கள். 1950-ல் பொதுச் சபை அதன் பெயரை ஐ. நா. குழந்தைகள் நிதி என்று மாற்றியது; குழந்தைகள் பராமரிப்பு தொடர்ந்து நடைபெற வேண்டிய ஒரு முக்கியப் பணி என்று அது கருதியதால் அவ்வாறு பெயர் மாற்றப்பட்டது.

## குழந்தைகள் நலன்

குழந்தைகளின் மன, உடல், சமுதாய நிலை மேம்பாடு இன்று யுனிசெஃப் நோக்கமாகும். நோய்த் தடுப்பு, ஊட்டச் சத்து, குடும்பம் நடத்தவும் தொழில் செய்யவும் ஆலோசனை கூறுதல், இயற்கையின் கொடுமைகளால் அல்லல்படும் குழந்தைகளுக்குப் பணி செய்தல் முதலியன யுனிசெஃப் திட்டங்கள். யுனிசெஃப் வழங்குவது போன்ற உதவிகள் தேவைப்படும் குழந்தைகள் தொகை, வளர்ச்சி கண்டு வரும் நாடுகளில் மட்டும், 80 கோடியாகும்.

தனது பணிகளை நடத்தி வைக்க அது நன்கொடைகளையே நம்பியிருக்கிறது. 30 பேர் கொண்ட ஒரு ஆட்சிக் குழு நிதியின் பணிகளை நடத்துகிறது. ஆண்டு தோறும் 10 பேர் ஐ. நா. பொருளாதார, சமுதாய சபையினால் தேர்ந்தெடுக்கப்படுகிறார்கள்.

யுனிசெஃப் அலுவலகம், ஐ. நா. தலைமையகத்தில் இருக்கிறது. ஒரு நிர்வாக டைரக்டரும், ஊழியர் குழுவும் நிர்வாகப் பணிகளை நடத்துகிறார்கள். முன்பு கிரீஸில் அமெரிக்கத் தூதராக இருந்த ஹென்ரி ஆர். லாபூஸி தற்போது யுனிசெஃப் டைரக்டராகப் பணி புரிகிறார். உலகம் நெடுகிலும் அது 32 கிளை அலுவலகங்களும் பெற்றிருக்கிறது.

## அமெரிக்காவின் பங்கு

ஐ. நா. குழந்தைகள் நிதிக்கு அதிகமாக நன்கொடை வழங்குவது, அமெரிக்க அரசாங்கமே. 1962, 1963, 1964 ஆகிய ஆண்டுகளில் அதற்கு வழங்கப்பட்ட நன்கொடைகளில் ஐந்தில் இரு பங்கு அமெரிக்கா வழங்கியதே. மேற்சொன்ன காலத்தில் ஆண்டுக்கு ஏறத்தாழ 120 லட்சம் டாலர் வீதம் அமெரிக்கா நன்கொடைகள் வழங்கியுள்ளது. நடப்பு ஆண்டிலும் அமெரிக்கா இதே தொகை வழங்குமென எதிர்பார்க்கிறார்கள்.

யுனிஸெஃப் முயற்சிகளுக்குத் தனிப்பட்ட அமெரிக்கரும் நன்கொடைகள் வழங்குகின்றனர். இலையுதிர் காலத்தில் நடைபெறும் ஹாலோவீன் பண்டிகையின் போது, குழந்தைகள் வீடு வீடாகச் சென்று நிதி திரட்டுகிறார்கள். வசூலாகும் பணம் முழுதுமே ஐ.நா. குழந்தைகள் நிதிக்குக் கொடுக்கப்படுகிறது.

மேலும், யுனிஸெஃப் வாழ்த்து அட்டைகளை வாங்குவதன் மூலமும் அமெரிக்கர்கள் ஆதரவளிக்கிறார்கள். 1963-ல் 130 லட்சம் அட்டைகளையும், 1964-ல் 170 லட்சம் அட்டைகளையும் அவர்கள் வாங்கினர்.

**பரிசுத் தொகை**

நோபல் சமாதானப் பரிசு ஒரு தங்கப் பதக்கமும் ரொக்கப் பரிசும் கொண்டது. நடப்பு ஆண்டில் ரொக்கப் பரிசு 51,788 டாலர்கள் (ரூ. 246,000). இதுவரை 52 பேருக்கும், எட்டு நிலையங்களுக்கும் இந்தப் பரிசு வழங்கப்பட்டுள்ளது.

1964-ல் அமெரிக்கக் குடியுரிமை இயக்கத் தலைவர் டாக்டர் மார்ட்டின் லூதர் கிங், நோபல் சமாதானப் பரிசு பெற்றார்.

1896-ல் காலமான ஸ்வீடன் நாட்டுத் தொழில் அதிபர் ஆல்ஃபிரட் பி. நோபல் ஏற்படுத்திய ஒரு அறக் கட்டளையிலிருந்து ஆண்டுதோறும் நோபல் பரிசுகள் வழங்கப்படுகின்றன. ஒவ்வொரு ஆண்டும் மக்கள் குலத்துக்கு யார் யார் சிறந்த சேவை செய்கின்றனரோ அவர்களுக்குப் பரிசுகள் வழங்கப்பட வேண்டுமென்று நோபல் எழுதி வைத்துள்ளார். ★

---

## வினாக்கள்

1. அரசாங்கப் பள்ளிகளில் வேலை செய்யும் ஆசிரியர்களுக்கு, தனியார்ப் பள்ளிகளில் தொண்டு புரியும் ஆசிரியர்களுக்கும் ஊதியம் சேவைத் தனி நிலைமைகள், (Service Conditions) விடுக்கை, மருத்துவ வசதிகள் போன்றவற்றில் உள்ள வேறுபாடுகள் யாவை? எவை வேறுபாடுகள் இருக்கின்றன?
**M. L. இரத்தினசாமி.**

* * * *

2. சேமநல நிதியுடன் சேர்த்துப் பிடிக்கப்படும் உயர்த்தப்பட்ட சேமநல நிதியை Enhanced (T. P. F.) அரசினர் எப்போது திருப்பிக் கொடுப்பர், கூடிய விரைவிலா? நெருக்கடி நிலை நீங்கிய பின்னரா?
**R. பீட்டர் ராஜ்.**

* * * *

3. தென்னிந்திய ஆசிரியச் சங்கம் ஆசிரியர்களின் வாழ்க்கைத் தரம் உயர, இதுவரைக்கும் என்ன செய்தது? இப்போது என்ன செய்து கொண்டிருக்கிறது? இனி என்ன செய்யப் போகிறது?
**M. L. இரத்தினசாமி.**

* * * *

4. நமது மாநிலத்தில் பல்வேறு மேலாண்மையின் கீழ் (Under different Managements) இயங்கிவரும் பள்ளிகளின் புள்ளி விவரங்கள் தருவீராக.
**R. சாமிநாதன்.**

[ **விடை: அடுத்த இதழில்** ]

# கல்வி எதிரொலி

## (EDUCATION ECHO)

*தமிழாக்கம்:* **ஆ. குப்புசாமி**

ஆசிரியத் தொழில் தொடர்பான அமைப்புக்களின் உலகக் கூட்டிணைப்பு (World Confederation of Organizations of the Teaching Profession)

**டிசம்பர் 1965 — வெளியீடு**

**அறியாமையை அகற்றும் பணி**

சென்ற செப்டம்பர்த் திங்கள் டெஹ்ரானில், அறியாமையை ஒழிக்கும் நோக்குடன் ஒரு மாநாடு கூட்டப்பட்டது. அதில் 58-நாடுகளிலிருந்து வந்த பேராட்கள் கலந்து கொண்டனர். அவர்கள் கல்வித்துறை அமைச்சர்கள் ஆவார்கள். கல்வித் திட்டம் முழுமையும் பொருளாதார வளர்ச்சித் திட்டத்தினுடன் இணைத்துப் பொருத்தப்படல் வேண்டும் என்று இம்மாநாட்டில் ஏகமனதாக ஒப்புக் கொள்ளப் பட்டது. "விக்டாப்" ஆப்பிரிக்க அலுவலகத்தின் தலைவர் E. பென்னெட்காலே இம்மாநாட்டில் விக்டாப்பின் பிரதிநிதியாகக் கலந்து கொண்டார். குழந்தைகளைப் பள்ளிக்கு அனுப்புதலும், முதியோர்களின் அறியாமையை அகற்றுதலும் மிகமிக வேண்டற்பாலன என்பதைப் பேராட்கள் ஒப்புக்கொண்டனர். முன்னது நெடுநாளைய கல்வி முதலீடாகும். பின்னது குறுகிய காலக் கல்வி முதலீடாகும். இதன் விளைவு தேசிய வளர்ச்சியில் தெரியும்.

யுனெஸ்கோவின் ஆராய்ச்சி ரீதியான எழுத்தறிவு பரப்பு திட்டத்திற்கும், வேறு பல முன்னோடித் திட்டங்களுக்கும் இம்மாநாடு முழு ஆதரவைத் தந்தது. ஐக்கிய நாட்டு அமைப்பின் சிறப்பு நிதியிலிருந்து இதற்கு உதவி கோரப்பட்டிருக்கிறது.

அம்மாநாடு, ஐக்கிய நாட்டு அமைப்பிற்கும், அதன் கிளையமைப்புக்களுக்கும், குறிப்பாக யுனெஸ்கோவிற்கும், அரசு சாரா அமைப்புக்களுக்கும், பொதுத்துறையிலும், தனியார்த்துறையிலும் நிறுவப்பட்டுள்ள நிறுவனங்களுக்கும், கீழ்க்கண்ட காரணங்களுக்குப் பொறுப்பு வாய்ந்த எல்லாத் தலைவர்களையும் வசப்படுத்த வேண்டும் என்று வேண்டிக் கொள்ளும் வேண்டுகோள் விடுத்துள்ளது.

1. அறியாமை மண்டிக் கிடக்கும் நாடுகளில் போடப்படும் திட்டங்களின் ஒரு பகுதியாக அறியாமையை அகற்றும் திட்டமும் திகழ வேண்டும்.

2. அறியாமையை ஒழிக்கும் ஆதாரங்களை முடிந்த அளவு பெருக்க வேண்டும்.


3. இராணுவச் செலவுகளைக் குறைப்பதன் விளைவாக அதற்காக ஒதுக்கிய நிதி மிகுதியாகி விடுமாதலால், அந்த நிதியைப், பொதுவாகப் பிறதுறைகள் வளர்ச்சியடைவதற்கும், குறிப்பாக அறியாமையை அகற்றும் பணிக்கும் ஒதுக்க வேண்டும்.

புதிய கருத்தான முதியோர் எழுத்தறிவு பரப்பு திட்டத்தை விளம்பரப் படுத்தி வழிவகைகள் அனைத்தையும் பயன்படுத்திக் கொள்ள வேண்டும். இம்மாநாட்டில் பேசிய பேச்சாளர்கள் ஆசிரியைகளின் மாபெரும் முக்கியத்துவத்தை வலியுறுத்திப் பேசினர்; ஏனெனில், நல்ல குடும்பங்களையும் நல்ல நாடுகளையும் உருவாக்கும் பெரும் பொறுப்புடையவர்கள் அவர்களே.

முதலில் தாய் மொழியின் மூலமாகத்தான் அறியாமையை அகற்ற வேண்டும்; அதன் பிறகே பிற மொழிகள் கற்பிக்கப்பட வேண்டும் என்னுங் கருத்தினை மாநாட்டிற்கு வந்திருந்த பேராட்கள் ஏற்றுக் கொண்டனர்.

**மாநாடு**

பிரேசிலிலுள்ள சாவோ பவுலோ என்னும் இடத்தில் ஆசிரியத் தொழிலின் மதிப்புத் தொடர்பான மாநாடு டிசம்பர் 6-ஆம் நாளிலிருந்து 11-ஆம் நாள் வரை




சியோல் நகரம், கொரியா—அடுத்த ஆண்டு (1966) "விக்டாப்" தனது பேராள் கூட்டத்தைக் குடிமக்கள் கூடத்திலும் (1) சட்ட சபை கூட்டத்திலும் (2) நடத்தும்.

நடப்பதாக இருந்தது. ஆனால் அது இப்போது தள்ளிப் போடப்பட்டுள்ளது. மீண்டும் எப்போது நடக்கும் என்ற செய்தி இனி வெளிவரும் கல்வி எதிரொலியில் வெளியிடப்படும்.

**புத்தகம்**

Filozofia de la Education grandes Pedagogos—Legislacion Eseolar—இந்தப் புத்தகத்தின் படியொன்று தலைமையலுவலகத்திற்குக் கிடைத்தது. இதனை இயற்றியவர் புகழ் மிகுந்த அர்ஜன்டினாக் கல்வி வல்லுநர் அட்டிலியோ. ஈ டொர்ராசா அவர்கள் ஆவர். Confederacion Argentina de maestrozy Profesores—இவர்களால் அப்புத்தகம் வெளியிடப்பட்டுள்ளது.

அமெரிக்கா, ஐரோப்பா ஆகிய கண்டங்களிலுள்ள நாடுகளின் கல்வித் தத்துவம், உலகக் கல்வி வல்லுநர்களைப் பற்றிய மதிப்புரை, அர்ஜென்டினாக் கல்விச் சட்டங்களைப் பற்றிய ஆராய்ச்சி ஆகிய செய்திகள் இப்புத்தகத்தில் அடங்கியுள்ளன. ஆதலின், இதனைப் படிப்போர் அர்ஜென்டினாவில் இன்றைய கல்விநிலை என்ன என் பதைத் தெளிவாகத் தெரிந்து கொள்ளலாம்.

220—பக்கங்கள் கொண்ட இப்புத்தகம் ஸ்பானிஷ் மொழியில் எழுதப்பட் டுள்ளது. மேலும் இதனைப் பற்றிய விவரங்கள் தெரிந்து கொள்ள விரும்புவோர் கீழ்க்கண்ட முகவரிக்கு மடல் வரைவாராக.

**CAMYP,**
**Anenida de Mayo 953,**
**Buenos Aires,**
**Argentina.**

**தலைமைச் செயலகத்தின் வெளியீடுகள்**

1965-ஆம் ஆண்டின் அறிக்கை, 1966-ஆம் ஆண்டின் சுவர்க் காலண்டர், ஆப் பிரிக்கக் கல்வி ஆகிய வெளியீடுகளைத் தலைமைச் செயலகம் அண்மையில் வெளியிட் டுள்ளது.

ஆடிஸ் அபாபாவில் நடந்த பதினைன்காவது பேராள்கூட்ட நடவடிக்கைகளின் சுருக்கம், அங்கு நிறைவேற்றப்பட்ட தீர்மானங்கள், "விக்டாப்" செயல் நிறை வேற்று குழுவின் அறிக்கை, 1966-ஆம் ஆண்டின் "விக்டாப்" நிகழ்ச்சித்திட்டம், பேராள் கூட்டத்திற்கு வந்தோரின் பட்டியல், "விக்டாப்" உறுப்பினர் பட்டியல், "விக்டாப்" விதிகளும், துணைவிதிகளும், 1964-ஆம் ஆண்டின் நிதியறிக்கை ஆகியவை 1965-ஆம் ஆண்டின் அறிக்கையில் அடங்கியுள்ளன. இவ்வறிக்கை ஒன்றின் விலை ஒரு டாலர்.

"கல்வியின் மூலம் சரிசம வாய்ப்பு" என்ற கருத்தினை விளக்கும் விதத்தில் வெளியிடப்பட்டுள்ள 1966-ஆம் ஆண்டின் சுவர்க் காலண்டரின் விலை 75 சென்ட்டு களாகும்.

ஒக்லஹாமா பல்கலைக் கழகத்தில் பேராசிரியராகப் பணியாற்றி வரும் பிராங்க் லின் பார்க்கர் என்பவரால் தயாரிக்கப்பட்ட ஆப்பிரிக்கக் கல்வி (50-பக்கங்கள் கொண் டது) என்ற புத்தகத்தின் விலை 1. 25 டாலர்.


இம்மூன்று வெளியீடுகளையும் வாங்க விரும்புவோர் "விக்டாப்" செயலத்திற்கு மடல் வரைவாராக. "ஆசிரியத் தொழிலும் உலக எழுத்தறிவும்" என்ற பொருளை அடிப்படையாகக் கொண்டு நடந்த ஐந்தாவது பன்னாட்டு முதியோர் கல்வி மாநாட் டின் நடவடிக்கைகள் முதியோர் கல்விச் சிறப்புக் குழுவால், வெளியிடப்பட்டுள்ளன. இதே வெளியீட்டில், "எழுத்தறிவு பரப்பு திட்டங்களில் விக்டாப்பின் பங்கு" என்ற அறிக்கையின் சுருக்கமும் அடங்கியுள்ளது.

**பேராசிரியர் லொரென்சோ கியோர் செல்லியின் மறைவு**

உலகக் கத்தோலிக்க ஆசிரியர்களின் ஒன்றிப்பின் தலைமைச் செயலாளர், பேராசிரியர் லொரென்சோ கியோர் செல்லி மறைந்த துயர்மிகு செய்தி தலைமைச் செயலகத்திற்குக் கிடைத்துள்ளது.

அக்டோபர் மாதத்தில், பாரீசில், உலக ஒன்றிப்பின் செயல்நிறைவேற்று குழு

---



ஆஸ்திரேலியாவில் கல்வியைப் பற்றியும், ஆசிரியர் தொழிலைப் பற்றியும் எடுத்துரைக்கும் மூன்று சிறு புத்தகங்களை ஆஸ்திரேலிய ஆசிரியக் கூட்டிணைப்பு தயாரித்துக்கொண்டு வருகிறது. இப்புத்தகங்கள் ஆஸ்திரேலிய ஆசிரியக் கூட்டிணைப்பின் கிளைச் சங்கங்களின் கருத்துக்களை முன் வைக்கின்றன.

இம் மூன்று சிறு புத்தகங்களில், முதற் புத்தகம் ஆஸ்திரேலியக் கல்வியின் நோக்கங்களைப் பற்றி எடுத்துரைக்கின்றன. இரண்டாவது புத்தகத்தின் தலைப்பு "கல்விக் கழகம்", தொழில் தொடர்பான "ஆசிரியப் பயிற்சி" என்பது. தயாராகிக்கொண்டிருக்கும் மூன்றாவது புத்தகம் ஆசிரியத் தொழிலின் மதிப்புத் தரம் என்பது தொடர்பானதாகும்.

இப் புத்தகங்களைப்பற்றிய இன்னும் பல விவரங்களைத் தெரிந்துகொள்ள விரும்புவோர் கீழ்க் கண்ட முகவரிக்கு மடல் வரைவாராக.

**Mervyn, B. BALL,**

Australian Teacher's Federation,
1966, Philip Street,
Sydney, N. S. W. AUSTRALIA.

ஆகஸ்ட் மாதத்தில், சியங்மாய் என்னும் இடத்தில், தாய்லந்து கல்விச் சங்கம், "கல்விப் பொருளியல்" (The Economics of Education) என்னும் பொருள் பற்றிய அறிஞர் அரங்கம் ஒன்றை நடத்தியது. அவ்வரங்கத்தில், நூற்றுக்கு மேற்பட்டதாய் கல்வி வல்லுநர்கள் கலந்து கொண்டனர். "விக்டாப்" இக் கூட்டம் நடத்த நிதியுதவி அளித்தது.

"கல்விப் பொருளியலும், தற்போதைய கல்வி மேலாண்மையும்," "கல்வி முதலீடும் வீண் விரயமும்," "சமுதாய, பொருளாதார வளர்ச்சிக்குக் கல்வித் திட்டம்," "தாய்லாந்திலுள்ள பல்வேறு மாவட்டங்களில், தொடக்கப் பள்ளிகளின் மதிப்பு." "ஆசியாவில் ஆசிரியர்களின் மதிப்பு" ஆகிய தலைப்புக்களில் பேச்சாளர்கள் பேசியதைக் மேலேயிருக்கும் படத்திலுள்ள கல்வி வல்லுநர்கள் கேட்டனர்.

கொள்கையை உருவாக்கலும், கல்வித் திட்டமும், மனித சக்தியின் தேவைக்கேற்பக் கல்வி வளர்ச்சி, கல்வியில் வீண் விரயத்தைத் தடுத்தல், கல்வி மேலாண்மையை மேம்பாடடையச் செய்தல் ஆகிய நான்கு பகுதிகளாகச் செயற்குழுக்கள் பிரிக்கப்பட்டன. இவை தங்கள் பரிந்துரைகளைப் பேரவைக் கூட்டத்தின் முன்பு வைத்தன.

கல்வித் திட்டம், நிருவாகம் ஆகிய பொறுப்புக்களையுடைய அரசாங்க அமைப்புக்களுக்குப் பேரவைக் கூட்டத்தின் தீர்மானங்கள் அனுப்பப்பட்டன. இதுபோன்றதொரு மாநாடு தாய்லாந்தில் நடப்பது இதுவே முதன் முறையாகும்.

---

வின் கூட்டம் நடந்து கொண்டிருந்தபோது பேராசிரியர் திடீரென்று நோய்வாய்ப் பட்டார்; இரண்டு நாள் கழித்து இயற்கை எய்தினர்.

"பன்னாட்டு ஒத்துழைப்பிற்குப் பெருமதிப்புத் தந்தவர். அவர்தம் மறைவு ஆசிரியர்கட்கிடையே பன்னாட்டு ஒத்துழைப்பிற்கு, உண்மையில் ஒரிழப்பாகும்." இவ்வாறு "விக்டாப்பின்" தலைமைச் செயலாளர் வில்லியம் ஜி. கார் அவர்கள், உலக ஒன்றிப்பின் துணைத்தலைவர் J. A. A. பான்கின் அவர்களுக்குப் பேராசிரியரின் மறைவு குறித்து வருந்தி மடல் வரைந்துள்ளார்.


## பன்னாட்டு ஒத்துழைப்பு ஆண்டு

கல்வியின்மூலம் உலக நாடுகள் ஒன்றையொன்று புரிந்து கொண்டு ஒத்துழைக்கும் நோக்குடன் யுனெஸ்கோவால் ஏற்படுத்தப்பட்டுள்ள திட்டம் ஒன்று "சேர்க்கப்பட்ட பள்ளிகளின் திட்டமாகும்" (The Associated Schools Project) இதனைப் பற்றி விரிவாகத் தெரிந்து கொள்ள விரும்புவோர், "பள்ளிகளில் ஒருநாடும் ஒருநாடும் உறவு கொள்ளல்" என்ற யுனெஸ்கோ வெளியீட்டை வாங்கிப் படிப்பாராக.

மேற்குறித்த திட்டத்தின் வரலாறு, இதுநாள் வரை ஏற்பாட்டுள்ள பட்டறிவின் சுருக்கம், முன்மாதிரியான சில திட்டங்களின் விவரங்கள் ஆகிய செய்திகள் 109—பக்கங்கள் கொண்ட இப்புத்தகத்தில் தரப்பட்டுள்ளன. ஒருநாடும், ஒருநாடும் புரிந்து கொண்டு உறவு கொள்வதற்கும், பள்ளிச் செயல்முறைகளைத் திட்டமிடும் ஆசிரியர்களுக்கும் இப்புத்தகம் பெரிதும் பயன்படும்.

இதனை வாங்கிப் படிக்க விரும்புவோர் கீழ்க்கண்ட முகவரிக்கு மடல் வரைவாராக.

**UNESCO,**
**Place de Fontenoy,**
**Paris 7e, France.**



உகாண்டா பள்ளிக்கூடங்களிலும், ஆசிரியச் சங்கத்திலும், ஆசிரியர்களாகவும், முதல்வர்களாகவும், அலுவலர்களாகவும், பணிபுரிவோர்களை மேலேயுள்ள படத்தில் பார்க்கலாம். இவர்கள் ஆசிரியர்கள் என்ற முறையிலும், கல்வித்துறைத் தலைவர்கள் என்ற முறையிலும், தங்கள் அறிவைப் பெருக்கிக் கொள்வதற்கும், அமெரிக்காவிலுள்ள ஆசிரிய அமைப்புக்களைப் பற்றிய விவரங்களை நன்கு தெரிந்து கொள்வதற்கும், பன்னாட்டு வளர்ச்சிக்கான செயலாண்மையின் ஆதரவின்கீழ் மூன்று மாதங்களாக அமெரிக்காவில் சுற்றுப் பயணம் செய்துகொண்டு வருகின்றனர்.

இவர்கள் உகாண்டாவிற்குத் திரும்பி வந்ததும், தங்கள் பயணம் தொடர்பான அறிக்கைகளைத் தயாரித்து அவற்றை உகாண்டா ஆசிரியச் சங்க உறுப்பினர்களுக்கு அனுப்புவர். மேலும், இவர்கள் தங்கள் பரிந்துரைகளையும், கருத்துரைகளையும் எடுத்துரைக்க வானொலியைப் பயன்படுத்திக் கொள்வதோடல்லாமல் நாட்டில் ஆங்காங்குள்ள பிராந்தியச் சங்கங்களுக்கும், வட்டாரச் சங்கங்களுக்கும் செல்லுவர்.

---

## உடலொறுப்பு (Corporal Punishment)

ஸ்காட்லந்தின் கல்வி நிலையம் (The Educational Institute of Scotland) உடலொறுப்பு தொடர்பான அறிக்கை ஒன்றை வெளியிட்டுள்ளது. அதில், டென்மார்க், சுவிட்சர்லந்து, அயர்லந்து தவிர மற்ற ஐரோப்பிய நாடுகளில், உடலொறுப்பு முற்றிலும் ஒழிக்கப்பட்டு விட்டது என்று எழுதப்பட்டுள்ளது.

15 - ஐரோப்பிய நாடுகளுக்கும், அமெரிக்கா, ஆஸ்திரேலிய, நியூசிலந்து, கனடா போன்ற நாடுகளுக்கும் அனுப்பப்பட்ட வினாத்தொகுதிகளுக்குக் கிடைத்த விடைகளின் அடிப்படையில் இவ்வறிக்கை தயாரிக்கப்பட்டுளது. இது ஸ்காத்லந்துக் கல்விப் பத்திரிக்கையில் (அக்டோபர் 15, 1965) வெளிவந்துள்ளது.

ஆஸ்திரேலியா, நியூசிலந்து, கனடா, அ. ஐ. நாடுகள் போன்ற நாடுகளில் காரணத்தோடு கூடிய உடலொறுப்பு மிக மிகக் குறைந்த அளவில் கொடுக்கப்படுகிறது.

உரிமைகள் மறுத்தல், பொழுது போக்கு நடவடிக்கைகளிலிருந்து ஒதுக்கி வைத்தல், பள்ளி நேரத்திற்குப் பின்னரும், பள்ளியிலேயே நிறுத்தி வைத்தல், தற்காலிகமாகப் பள்ளியை விட்டு நீக்கி வைத்தல், பள்ளியை விட்டே வெளியேற்றுதல், தனிப் பள்ளிக்கூடங்களிலோ, வகுப்புக்களிலோ அடங்காச்சிறுவர்களைச் சேர்த்தல் போன்ற தண்டனைகள், உடலொறுப்பு முற்றிலும் ஒழிக்கப்பட்டுவிட்ட ஐரோப்பாக் கண்டத்து நாடுகளிலுள்ள பள்ளிகளில் கொடுக்கப்படுகின்றன.

உடலொறுப்புக்குப் பதிலாகப் பயனுள்ள வேறொரு தண்டனை கண்டுபிடிக்கப்படுமுன், ஒழுங்கையும், அமைதியையும் பள்ளிகளில் நிலைநாட்ட அவ்வொறுப்பு இருந்தே தீரவேண்டும்—இவ்வாறு அவ்வறிக்கை முடிகிறது. பள்ளிகளில் ஒழுங்கை நிலை நாட்டுவதற்கு அஃது ஒரு முறையாகப் பயன்படக்கூடாது என்ற நோக்குடன்,



"விக்டாப்" செயல் நிறைவேற்று குழுவின் உறுப்பினரான நயாம்கி அடிகோ ஐவரி கோஸ்ட் சட்டசபையின் உறுப்பினராகத் தேர்ந்தெடுக்கப்பட்டிருக்கிறார். SNEPCI—ன் முழு நேரத் தலைமைச் செயலாளராகத் தொடர்ந்து பணியாற்றுவார்.

ஆகஸ்ட் மாதத்தில், ஆடிஸ் அபாபாவில் நடந்த பேராள் கூட்டத்தில் திருவாளர் அடிகோ "விக்டாப்" செயல் நிறைவேற்று குழுவின் உறுப்பினராகத் தேர்ந்தெடுக்கப்பட்டார்.

மேற்சொன்ன அறிக்கையை அடிப்படையாகக் கொண்டு, ஸ்காத்லந்தில், ஆசிரியர்களின் பிரதிநிதிகளும், கல்வியதிகாரிகளும் பேச்சு வார்த்தைகள் நடத்துகின்றனர்.


இவ்வறிக்கையைப் பற்றி மேலும் தெரிந்து கொள்ள விரும்புவோர் கீழ்க்கண்ட முகவரிக்கு மடல் வரைவாராக.

**The Educational Institute of Scotland,**
**46, Moray Place,**
**Edinburgh 3,**
**Scotland.**

ரோமில், நவம்பர்த் திங்களில், உணவு விவசாய அமைப்பின், பொருளியல் தொடர்பான தொழில் நுணுக்கக் குழுக் கூட்டத்தின்முன் ஓர் அறிக்கை வைக்கப்பட்டது. அதில், உணவு விவசாய அமைப்பின், விவசாயக் கல்வி அறிவுரையாளர்கள்,

ஆப்பிரிக்காக் கண்டத்தைச் சேர்ந்த 36-நாடுகளுக்கு, 1964-65-ஆம் ஆண்டில், விவசாயம் தொடர்பாக அறிவுரை கூறிடச் சென்றனர் என்று கூறப்பட்டுள்ளது.

பதினொன்றாவது உணவு விவசாய அமைப்பு மாநாட்டில் நிறைவேற்றப்பட்டதொரு தீர்மானத்தைத் தொடர்ந்து, 1962-ஆம் ஆண்டில் சிறப்பு நிகழ்ச்சித் திட்டமொன்று தொடங்கப்பட்டது. உணவு, விவசாயம் ஆகிய துறைகளில், திறமைமிக்கதும் சிக்கனமிக்கதுமான பயிற்சியளிக்கும் நிலையான நிறுவனங்களைத் திட்டமிடவும், உறுதிப்படுத்தவும், விரிவுபடுத்தவும் ஆப்பிரிக்க நாடுகளுக்கு உதவி செய்ய வேண்டும் என்பதே அத்தீர்மானத்தின் அடிப்படைநோக்கமாகும். பசுடோலந்து, கென்யா, மாளாவி, நைஜீரியா, சாம்பியா, லிபியா, டுனீஷியா, ஐவரிகோஸ்ட், தாகோமி, டோகோ, கேமரூன், காஸ்கோ ஆகிய நாடுகளில், விவசாயக் கல்வி எவ்வாறு வளர்ச்சியடைந்துள்ளது என்பது பற்றியும், விவசாயக் கல்லூரிகளும், பயிற்சி நிலையங்களும்



இது கொம்மார்கியூ குகையிலுள்ள புடைப் பகழ்வுப் பாறைப் பாடிவின் (கி.மு. 13,000 டோர்டாக்னே, பிரான்ஸ்) கோட்டோவியமாகும்; "மனிதன் தன் கலையின் மூலம்" (Man Through His Art) என்ற புத்தகத்தின் மூன்றாம் பகுதியாகிய மனிதனும் விலங்கும் (Man and Animal) என்னும் ஏட்டி எடுக்கப்பட்டது.

"மனிதன் தன் கலையின் மூலம்" என்ற தலைப்பின் கீழ் "விக்டாப் பால்" தொடர் புத்தகங்கள் வெளியிடப்படுகின்றன. அவ்வரிசையில் புதியனவாக இப்போது வெளியிடப்பட்டுள்ள இரண்டு புத்தகங்கள் "இசையும்", "மனிதனும் விலங்கும்" என்பனவாகும். இவை இப்போது விக்டாப்பில் கிடைக்கின்றன. கீழ்த்திசைக் கலைகளைப் பற்றியும், மேற்றிசைக் கலைகளைப் பற்றியும் நன்கு புரிந்துகொள்ள உதவுதற்கென்றே ஏற்படுத்தப்பட்டுள்ள யுனெஸ்கோவின் முக்கியத் திட்டத்திற்குத் துணையாக நிற்கும் விதத்தில் இத்தொடர் ஏடுகள் கூட்டிணைப்பால் வெளியிடப்படுகின்றன.

"இசை" என்னும் புத்தகத்தில் இருபது வண்ணப் படங்களும், வேறுபல படங்களும் அடங்கியுள்ளன. வரலாற்றுக் காலத்திலிருந்தே மனிதனின் வாழ்க்கையில் இசை எவ்வாறு முக்கியம் வாய்ந்ததாக இருந்தது என்னும் உண்மையை இப்புத்தகம் நுணுக்கமாக ஆராய்கிறது.

ஜாவாவின் புடைப் பகழ்வுப் பாறைச் சித்திரங்களும், சீனு, ஜப்பானின் விளக்கமற்கு தாட்சுருள்களும், மெக்சிகோவின் சுவரோவியங்களும், பிரா எஞ்சலிகோ, குரூனிவாலட், ரெம்பிராணட், மார்க்சாகல் ஆகியவர்களால் வரையப்பட்ட ஓவியங்களும், இருபது வண்ணப் படங்களாக உள்ளன. பல்வேறு கலைகளிலிருந்தும், காலங்களிலிருந்தும் இப்படங்கள் தேர்ந்தெடுக்கப்பட்டுள்ளன.

திருமதி அனில் டி சில்வா, பிஷல் டிரவுட் மேன் ஆகியவர்களின் துணைகொணடு, ஆட்டோவான சிம்சன் அவர்கள், ''மனிதனும் விலங்கும'' என்னும புத்தகத்தை எழுதினுர். புத்தகத்தின் பொருள் ஒன்றோடொன்று நெருங்கிய தொடர்புடைய மூன்று காரணங்களுக்காக முக்கியத்துவம் வாய்ந்ததாக உள்ளதென அதன் முன்னுரையிற் கூறியுள்ளார்.

அவை : (1) நம் வாழ்க்கையிலும், அனுபவத்திலும் விலங்கின் முக்கியத்துவம்.

(2) கலைக்குரிய ஒரு பொருள் என்ற முறையில் விலங்கின் முக்கியத்துவம்.

(3) மனிதனுக்கும் விலங்குகளுக்கும் இடையேயுள்ள உறவில் ஏற்பட்ட அடிப்படை மாறுதல்களும், மானிட இன வரலாற்றில் ஏற்பட்ட ஒவ்வொரு நெருக்கடி நிலையையும் அடையாளமிடடுக் காட்டுகின்றன என்றும் உண்மை.

கிறிஸ்து பிறப்பதற்கு முன், வரலாற்றுக் காலத்துக்கு முற்பட்ட, 15, 14-ம் ஆண்டுக் காலத்திய சிற்பக் காட்சிகளுடன் இப்புத்தகம் தொடங்குகிறது. கிரேக்க இந்தியச் சிற்பங்கள், காட்டிக் துணி வகைகள், பிரஞ்சு உலோக வேலைப்பாடுகள் ஆகியவற்றின் படங்களும், ஜப்பானிய கருமை ஓவியமும், நைஜீரியன் வெண்கல உருவத்தின் படமும், டெலாகிராப்க்ஸ் மார்க், பிரேகியூ ஆகியவர்களின் ஓவியங்களும் இதில் இடம் பெற்றுள்ளன.

இவ்விரு புத்தகங்களில் உள்ள படங்களின் கீழ் விளக்க வுரைகள் எழுதப்பட்டுள்ளன.

''மனிதன் தன் கலையின் மூலம்'' என்னும் தலைப்பின்கீழ் வரும் தொடர் வரிசைப் புத்தகங்கள் ''விக்டாப்''பின் ஆதரவின்கீழ் வெளிவருகின்றன. இதற்கான நிதியுதவியை யுனெஸ்கோ அளிக்கிறது. இப்புத்தகங்கள் எல்லாம் பன்னுடுகளைப் பற்றிப் புரிந்துகொள்ள உதவும் சாதனங்களாகும். ''அமரும் அமைதியும்'' என்ற முதற் புத்தகம் 1964-ல் வெளியிடப்பட்டது.

இப்புத்தகங்களைப் பற்றி மேலும் பல விவரங்கள் தெரிந்துகொள்ள விரும்புவோர் கீக்கண்ட முகவரிக்கு மடல் வரைவாராக.

**THOMAS HOUSE,**
1330, Massachusetts Avenue, N. W.,
WASHINGTON D.C. 20005, U.S.A.

---

எவ்வாறு வளருகின்றன என்பது பற்றியும் கூறுகின்ற விரிவான அறிக்கைகள், தயாரிக்கப்பட்டுள்ளன.

உகை மக்களுக்கு உதவும் நோக்குடன், பஞ்ச நிவாரண ஆக்சுபோர்டு குழு தொடர் விளக்கப்படங்கள் சிலவற்றைத் தயாரித்துள்ளது.

தொழில், உழவு ஆகிய துறைகளில் பயிற்சி, எதிர்பாராத்துயர நிகழ்ச்சிகளுக்கு நிவாரணம், கட்டடத் திட்டங்கள், நோய் வராமல் காத்துக் கொள்ளுதல், குழந்தைப் பாதுகாப்பு, நீர்ப்பாசனத் திட்டம் ஆகிய துறைகளில் பஞ்ச நிவாரண ஆக்சுபோர்டு குழு எவ்வெவ்வாறெல்லாம் உதவும் என்பதை விளக்கிக் காட்டும் விளக்கப் படங்களே மேற் சொன்ன படங்கள்.

இதே அமைப்பு, பெக்குவானுலந்து, கிரீஸ், பொலிவியா ஆகிய நாடுகளில் சின்னஞ் சிறியோர் எவ்வாறு வாழ்கின்றனர் என்பதை விளக்கும் சிறு புத்தகங்களையும் தயாரித்துள்ளது.

மேலும், இக்குழுவின் பணிகளைப் பற்றித் தெரிந்து கொள்ள விரும்புவோர் கீழ்க்கண்ட முகவரிக்கு மடல் வரைவாராக.

**OXFORM,**
**274, Banbury Road,**
**Oxford,**
**England.**